| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர். சி. உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள் |

**ந.க.எண். 086254 / எப்1/2018** **நாள்.26.11.2018**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – மார்ச் 2020 – பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவேற்றம் செய்வதற்கும், தேர்வு கட்டணம் செலுத்துவதற்கும் கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :** அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:12.11.2019.

------

பார்வையில் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளில், மார்ச் 2020 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணாக்கரது விவரங்களை **13.11.2019 முதல் 26.11.2019** வரையிலான நாட்களில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து, தேர்வுக் கட்டணத்தினையும் இணையதளம் வாயிலாக செலுத்தவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் ஒரு சில பள்ளிகளின் மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதிலும், இணையதளம் மூலம் தேர்வுக்கட்டணத்தினை செலுத்துவதிலும் சில சிரமங்கள் ஏற்படுகின்றன என தெரிய வருவதால், **மேல்நிலை முதலாமாண்டு மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதற்கும், இணையதளம் மூலம் தேர்வுக்கட்டணத்தினை செலுத்துவதற்கும் 29.11. 2019 வரை கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது.**

மேலும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட மேல்நிலை பள்ளிகளில் மார்ச் 2020 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் மாணாக்கரின் விவரங்களை பதிவேற்றம் செய்வதில் அல்லது தேர்வுக் கட்டணம்

..2..

செலுத்துவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், அது குறித்த விவரத்தினை இத்துடன் இணைத்து அனுப்பப்படும் படிவத்தில் **(Excel format only)** கீழ்க்கண்ட இணையதள முகவரிக்கு உடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

dgef1sec@gmail.com

மேலும், அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் **26.11.2019 முதல் 29.11.2019 வரையிலான நாட்களில்** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று **(Online Portal for School and Educational Offices -- HR. Secondary (First Year) – Examinations 2019-20 – Nominal Roll Registration -- TML Payment of HSC XI)** மார்ச் 2020 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்விற்கான தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை **(TML) ஆன்லைன் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான கட்டணம் ரூ.300/–**ஐ செலுத்த வேண்டும். **அனைத்து மேல்நிலைப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) இக்கட்டணத்தினை செலுத்தவேண்டும்.**

மேலும், மேல்நிலை முதலாமாண்டு தேர்வெழுதும் பள்ளி மாணாக்கரிடம் பெற்ற தேர்வுக்கட்டணத்தை, பார்வையில் காணும் செயல்முறைகளில் அறிவுறுத்தியவாறு செலுத்தாமால், +2 பள்ளி மாணாக்கருக்கு செலுத்தியது போன்று SBI Online Payment-ஐப் பயன்படுத்தி செலுத்திய பள்ளித் தமையாசிரியர்கள், +1 தேர்வுக்கட்டணம் செலுத்தியதற்கான இரசீதினை (Receipt), சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும். மேலும், இணையதளத்தின் மூலம் தேர்வுக்கட்டணத்தினை செலுத்த இயலாதவர்கள் மட்டும், அக்கட்டணத்திற்கான தொகைக்கு "Director of Government Examinations, Chennai - 6" என்ற பெயரில் வங்கி வரைவோலை எடுத்து, அதனை சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும்.

மேலும், தற்போது பள்ளிகளில் +2 பயிலும் மாணாக்கர், அவர்கள் ஏற்கனவே மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை (+1 Arrear) மீண்டும் மார்ச் 2020 மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வின்போது எழுதுவதற்கு

..3..

செலுத்த வேண்டிய தேர்வுக்கட்டண விவரத்தினை அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களும் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள விரைவில் வாய்ப்பு வழங்கப்படும். அதன்பிறகு அப்பட்டியலில் குறிப்பிட்ட தேர்வுக் கட்டணத்தினை சம்பந்தப்பட்ட மாணாக்கரிடமிருந்து பெற்று இணையதளம் மூலம் செலுத்த வேண்டிய நாட்கள் குறித்த விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**இணைப்பு :** மேற்குறிப்பிட்டவாறு

**ஒம்/–**
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காகக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்